**மத்திய அதிவேகப்பாதை செயற்திட்ட பிரிவு I (கடவத்தை – மீரிகம) செயற்திட்டம் - 2023**

-----------------------------------------------------------------------------------------------------------------------

மத்திய அதிவேகப்பாதை செயற்திட்ட பிரிவு I (கடவத்தை – மீரிகம) செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சீனா ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 மார்ச் 22 ஆம் திகதிய (2018) 17 மொத்தம் (474) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராக உள்ளது. கடவத்தை முதல் மீரிகம வரையிலான மத்திய அதிவேகப்பாதை பிரிவு I இன் நிர்மாணப் பணிகளை நிறைவேற்றி பூர்த்தி செய்தல் செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 176,785 மில்லியனாக (திருத்தப்பட்டது) இருந்ததுடன் அதில் ரூபா 134,628 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 989.448 மில்லியன் சீனா ஏற்றுமதி இறக்குமதி வங்கியினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2020 செப்தெம்பர் 15 இல் தொடங்கியிருந்ததுடன் 2024 செப்தெம்பர் 14 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்றகணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை.

பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்காய்வு விடயம் / கணக்கீட்டு குறைபாடுகள் | தொகை ரூபா. மில்லியன் | முகாமையின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | CEP 1 சார்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் பெறப்பட்ட கடனுக்கான வட்டி ரூபா. 21,964.69 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், SLPSAS 4- கடன்படு கிரயம் நியமத்தின் 18 ஆம் பந்தியின் இன் தேவைப்பாடுகளின் பிரகாரம் 2023 டிசம்பர் 31 இன் நிதிக் கூற்றில் மேற்கூறிய வட்டி கிரயத்தினை கருத்திட்டம் அங்கீகரிக்கவில்லை. இதன் விளைவாக, குறை வேலை பணிகள் அந்தத் தொகையினால் குறைத்து மதிப்பிடப்பட்டிருந்தன. | **21,964.69** | 1.2 (அ) உடன் உடன்படவில்லை.<br>வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA) ஆனது CEP - 1 சார்பாக BOC உடன் ஆலோசனை சேவைக்கான கடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.<br>எவ்வாறாயினும், CEP - 1 கடன் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடாமையினால் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கோ அல்லது வட்டி செலுத்துவதற்கோ CEP – 1 ஆனது பிணைக்கப்படவில்லை. கருத்திட்டம் முடிந்த பிறகு, மேற்கூறப்பட்ட சொத்துக்களை CEP – 1 ஆனது RDA இற்கு மாற்றம் செய்யும், அதன் பிறகு CEP – 1 சார்பாக ஏற்படும் வட்டிச் செலவு RDA வின் கணக்குப் புத்தகங்களில் மூலதனமாக்கல் செய்யப்படும். | நிதி அறிக்கையினை சான்றுப் படுத்துவதற்கு முன்னர் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்படுவதை கணக்காளர் உறுதிப்படுத்துதல் வேண்டும். |

## 3. பௌதீக செயற்றிறன்

### 3.1 கருத்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயல் முன்னேற்றம்

| கூறு | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயம் | கால தாமதங்களுக்கான காரணங்கள் |
|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயற்திறன் அலகுகள் / சதவீதம் | அடைந்து கொள்ளப்பட்ட செயற்திறன் அலகுகள் / சதவீதம் | | |
| பொதி I கடவத்தையிலிருந்து கொஸ்ஸின்ன | 100 | 39.65 | கருத்திட்டத்தை சரியான நேரத்தில் முடிப்பதில் எதிர்மறையான தாக்கம் மற்றும் அதன் நோக்கங்களை அடைவதில் காலதாமதம் காணப்படுகிறது. | சீனாவின் EXIM வங்கி கடன் வழங்குவதை நிறுத்தியுள்ளது. |
| பொதி II கொஸ்ஸின்ன யிலிருந்து மீரிகம | 92.07 | 35.37 | | |

| | |
|---|---|
| **முகாமையின் பதில்கள்** | உடன்படுகின்றோம். |
| **கணக்காய்வாளரின் பரிந்துரைகள்** | ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் முறையான அனுமதியுடன் வேலைத் திட்டம் திருத்தப்படல் வேண்டும். |

**3.2 தள விஜயங்களின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள்**

| இல | கணக்காய்வு விடயம் | முகாமையின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கடவத்தை தொடக்கம் ch 0+000 முதல் ch 0+500 வரையிலான வெளி வட்ட நெடுஞ்சாலையின் முதல் பகுதி 2015 இல் மேற்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2023 திசம்பர் 31 வரையிலும் கூட கொள்முதல் நடைமுறைகள் ஆரம்பிக்கப்படவில்லை. | ஆரம்பத்தில், OCH திட்டத்தின் கீழ் சாலையின் ch 500 இலிருந்து முதல் 500 மீட்டர் கட்டுமானம் OCH மூலம் வெளி வட்டச் சாலைத் திட்டத்தினால் மேற்கொள்ளப்பட முன்மொழியப்பட்டது. ஆனால் அந்த திட்டத்தின் கடன் ஒப்பந்தம் காலாவதியானதால், நிர்மாண வேலையானது CEP-1 திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதற்காக, மதிப்பீடு மற்றும் விலை மனு ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு, நிர்மாணத்திற்கான நிதியை எவ்வாறு பெறுவது என்பது குறித்து 2023.03.17 ஆம் திகதிய MOH/ADS/ENG/CEP1-Gen ஆம் இலக்க கடிதத்தின் ஊடாக வெளி வளத்துறை திணைக்களத்துக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், நிதி ஒதுக்கீடு இன்னும் முடிவு செய்யப்படவில்லை. | கடவத்தை தொடக்கம் ch 0+000 முதல் ch 0+500 வரையிலான பகுதியை நிறைவு செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். |
| (ஆ) | அணை நிரப்புதல் மற்றும் வெட்டுதல் ஆகியவற்றின் கட்டுமானத்தின் பௌதீக ரீதியான முன்னேற்றம் 100 சதவீத இலக்கை அடைய எதிர்பார்க்கப்பட்டது மற்றும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொதி 1 மற்றும் பொதி 2 இன் கீழ் அணை நிரப்புதலின் அடையப்பட்ட முன்னேற்றம் முறையே 62.2 சதவீதம் மற்றும் 23.8 சதவீதம் ஆக காணப்பட்டது. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொதி 1 மற்றும் பொதி 2 இன் கீழ் அணைக்கட்டின் கட்டுமானத்தின் உண்மையான முன்னேற்றம் முறையே 56.1 சதவீதம் மற்றும் 33.6 சதவீதம் ஆகும். | உடன்படுகின்றோம்.<br><br>நிதியை விடுவிப்பதில் சீனாவின் EXIM வங்கி தாமதமாகியதால் , அணை நிரப்புதல் மற்றும் வெட்டுதல் தொடர்பான பணிகள் தாமதமாகியது.எவ்வாறாயினும், நிதி விடுவிக்கப்பட்ட பிறகு, ஒப்பந்ததாரர் வேலையினை தொடர்வார். | கூடுதல் கட்டணம் செலுத்துவதைத் தவிர்ப்பதற்காகக ஒப்பந்த நிர்வாகச் செயல்பாட்டில் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதிக்குள் பாலம் கட்டுமானம் பொதி 1 மற்றும் பொதி 2 இன் கீழ் நிறைவுசெய்வதற்கு திட்டமிடப்பட்டது மற்றும் நிதி கிடைக்காமை காரணமாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒட்டுமொத்த உண்மையான பௌதீக ரீதியான முன்னேற்றம் முறையே 63.5 சதவீதம் மற்றும் 41.47 சதவீதம் ஆகும். | உடன்படுகின்றோம்.<br><br>பிரிவு 1.2.1 (ஏ) ii இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் , திட்டத்திற்கான நிதியை விடுவிப்பதில் காலதாமதம் ஏற்பட்டது. இதனால், பாலம் கட்டும் பணியும் கூட தாமதமானது. எவ்வாறாயினும், EXIM வங்கியில் இருந்து ஒப்பந்ததாரருக்கு நிதி விடுவிக்கப்பட்ட பிறகு, ஒப்பந்ததாரர் மீதமுள்ள பணிகளைத் தொடர்வார். | கூடுதல் கட்டணம் செலுத்துவதைத் தவிர்ப்பதற்காகக ஒப்பந்த நிர்வாகச் செயல்பாட்டில் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | பொதி 01 இன் கீழ் ஆறு மேம்பால கட்டுமானங்கள் 2023 திசெம்பர் 31 ஆம் திகதிக்குள் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டது மற்றும் திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உண்மையான முன்னேற்றம் 12.1 சதவீதமாக இருந்தது மற்றும் கள பரிசோதனை திகதியில் OP-01, OP-02 மற்றும் OP-03 ஆகியவற்றின் நிர்மாணிப்பு தொடங்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படுகின்றோம்.<br><br>சீனாவின் EXIM வங்கி நிதியை விடுவிப்பதில் காலதாமதம் ஏற்பட்டதால், மேம்பாலம் கட்டும் வேலைகள் தாமதமானது. எவ்வாறாயினும், ஒப்பந்ததாரருக்கு நிதியினை விடுவித்த பிறகு, அவர் வேலையினை தொடர்வார். | கூடுதல் கட்டணம் செலுத்துவதைத் தவிர்ப்பதற்காகக ஒப்பந்த நிர்வாகச் செயல்பாட்டில் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| (உ) | இந்த கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் கம்பஹா, வெயங்கொட மற்றும் மீரிகம ஆகிய மூன்று இடைமாறும் Junctions அடையாளம் காணப்பட்டுள்ளன மற்றும் அந்த திகதியில் அந்த இடைமாறும் Junctions களின் எந்த நிர்மாணங்களும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | உடன்படுகின்றோம்.<br><br>பிரிவு 1.2.1 (ஏ) vi இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் , திட்டத்திற்கான நிதியை விடுவிப்பதில் காலதாமதம் ஏற்பட்டது. இதனால், இடைமாறும் Junctions களின் நிர்மாணிப்பு பணிகள் தாமதமானது. எவ்வாறாயினும், EXIM வங்கியில் இருந்து ஒப்பந்ததாரருக்கு நிதி விடுவிக்கப்பட்ட பிறகு, ஒப்பந்ததாரர் மீதமுள்ள பணிகளைத் தொடர்வார். | கூடுதல் கட்டணம் செலுத்துவதைத் தவிர்ப்பதற்காகக ஒப்பந்த நிர்வாகச் செயல்பாட்டில் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | பல்லேவல நகருக்கு அருகாமையில் உள்ள கலேலிய - மெதகம்பலிட்டிய வீதியில் (B 183) அதிவேக நெடுஞ்சாலையின் மீது அசல் வடிவமைப்பில் மேம்பாலமொன்றை அமைக்க வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்கு தேவையான நிலத்தை கையகப்படுத்தும் பணி ஏற்கனவே முடிக்கப்பட்டு, முதற்கட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.<br>எவ்வாறாயினும், அசல் திட்டத்தை நிர்மாணிப்பது தொடர்பான மீரிகம பல்லேவல வர்த்தக சங்கம் மற்றும் சமூக குழுக்களின் எதிர்ப்பு காரணமாக இந்த இடத்தின் பொருத்தமான கட்டமைப்புத் திட்டங்களை மாற்றுவதற்கு 2023 மார்ச் 23 அன்று அமைச்சரவைப் பத்திரம் எண் 12/2023 இன் கீழ் 05 மாற்று முன்மொழிவுகள் அடையாளம் காணப்பட்டன. இந்த அமைச்சரவைப் பத்திரத்தின் 04 வது முன்மொழிவானது சம்பந்தப்பட்ட இடத்தில் இருந்து 640 மீட்டர் தொலைவில் உள்ள கம்பங்களில் ஒரு மேம்பாலத்தை அமைக்க வேண்டுமென்று 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 18 ஆம் திகதிய අමප/23/0628/608/046 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தால் ஆல் அங்கீகரிக்கப்பட்டது. மேலும், அசல் திட்டத்துடன் ஒப்பிடும்போது கூடுதலாக ரூபா. 2,590 மில்லியன் தொகை செலவு ஏற்படுமென்று அவதானிக்கப்பட்டது. | உடன்படுகின்றோம்.<br>22.02.2023 அன்று நடைபெற்ற பி.எஸ்.சி கூட்டத்தில் இது பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது. இதில் நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் இந்தப் பிரிவில் உள்ள காணியை ஒப்பந்ததாரரிடம் அவசரமாக கையளிப்பதன் அவசியத்தை கருத்தில் கொண்டு அமைச்சரவை அமைச்சர்களின் அபிப்பிராயத்தை பெற்றுக்கொள்ள முன்மொழியப்பட்டது. அதன் பிரகாரம், 2023 ஏப்ரல் 18 ஆம் திகதியிடப்பட்ட AMAPA/23/0628/608/046 ஆம் இலக்க அமைச்சரவையின் அமைச்சர்கள் முடிவின் பிரகாரம், கடவத்தை - மீரிகம வீதிப் பிரிவில் (Ch 28+540) கலேலிய - மெதகம்பிட்டிய (B 183) கடவை அமைந்துள்ள பகுதிக்கு 640 மீற்றர் நீளமான மேம்பாலம் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. எனவே, ஒப்பந்ததாரர் அதற்கமைவாக கட்டுமான பணிகளை மேற்கொள்வார். | ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் சமூக தாக்க மதிப்பீட்டில் கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (எ) | தளத்திலுள்ள பிந்தைய இறுக்கப்பட்ட precast beams களில் அதிகப்படியான நீளமான அறைகள் போன்ற தீவிரமான தொழில்நுட்பச் சிக்கல்கள் எழக்கூடும் என்பது அவதானிக்கப்பட்டது மற்றும் அந்தந்த கட்டமைப்புகளில் விட்டங்கள் வைக்கப்படும் வரை அதனைக் கட்டுப்படுத்த வழி இல்லை மற்றும் உதரவிதானச் சுவர்கள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின் பிரகாரம் கட்டப்பட்டுள்ளன. தளத்தில் 554 பீம்கள் உள்ளன, அவை இந்த சிக்கலுக்கு பொறுப்பானவை ஆகும்.<br>மேலும், ஓரளவு கட்டப்பட்ட | உடன்படுகின்றோம்.<br>நாட்டில் நிலவும் பொருளாதார பிரச்சனை மற்றும் அந்நிய செலாவணி பற்றாக்குறை காரணமாக ஒப்பந்ததாரரின் மாதாந்திர பட்டியல்களை செலுத்துவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. எனவே, ஒப்பந்ததாரர் 11.08.2023 ஆம் திகதி முதல் கட்டுமானப் பணிகளை நிறுத்தியுள்ளார். அதனால் பீம் அமைக்கும் பணிகளும் தாமதமாகியது. எவ்வாறாயினும், ஒப்பந்ததாரருக்கு நிதி கிடைக்கப்பெற்றதும், அவர் பணிகளை விரைவாக | ஒப்பந்த நிருவாக செயல்முறை, சிவில் கட்டுமானம், வடிவமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் அம்சங்களை உள்ளடக்கிய முறையான விசாரணையொன்று நடத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டமைப்புகளின் வெளிப்படையான வலுவூட்டலின் அரிப்பு ஒரு தீவிரமான பிரச்சினையாக இருக்கலாம், எவ்வாறாயினும், நிர்மாணிப்புக்கள் ஏராளமாக இருப்பதன் காரணமாக ஒப்பந்தக்காரரால் தற்காலிக பாதுகாப்பு எடுக்கப்பட்டுள்ளது. எனவே, இது எதிர்காலத்தில் கருத்திட்டத்திற்கு கூடுதல் செலவினை ஏற்படுத்தும். மேலதிகமாக, கணக்காய்வின் மூலம் வழங்கப்பட்ட தகவலின் பிரகாரம், மே 04 அன்று VD 10 P1-P2 இடத்தில் 03 பிசி இரும்பு கர்டர்கள் (1 கர்டர் கீழே விழுந்தன மற்றும் 02 இரும்பு கர்டர்கள் பிணைக்கப்பட்டிருந்தன) சரிந்துள்ளன.<br>இது தொடர்பாக சுயாதீன விசாரணை அறிக்கையைப் பெறுவதற்கு குழுவொன்றை நியமிக்குமாறு திட்டப் பணிப்பாளர் வரிசை அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.<br>எவ்வாறாயினும், குழுவிற்கான அனுமதி எதுவும் பெறப்படவில்லை மற்றும் சுயாதீன விசாரணையை நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்வார். | |
| (ஏ) | மதகு அமைக்கும் பணியின் இருபுறமும் மண் நிரப்பும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை<br>மற்றும் மதகுகள் அமைக்கும் பணி பாதியில் நிறுத்தப்பட்டதன் காரணமாக அது பொதுமக்களை பெரிதும் பாதித்தது. | உடன்படுகின்றோம்.<br><br>நாட்டில் நிலவும் பொருளாதாரப் பிரச்சனை மற்றும் அந்நியச் செலாவணி பற்றாக்குறை காரணமாக, ஒப்பந்ததாரரின் மாதாந்திர பட்டியல் கட்டணம் செலுத்துவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. எனவே, ஒப்பந்ததாரர் 11.08.2023 முதல் கட்டுமானப் பணிகளை நிறுத்தியுள்ளார்.<br><br>அதனால் மதகு கட்டும் பணியும், தூர்வாரும் பணியும் கூட தாமதமாகியது.<br>எவ்வாறாயினும், ஒப்பந்ததாரருக்கு நிதி கிடைக்கப்பெற்றதும், அவர் பணிகளை விரைவாக மேற்கொள்வார். | பொதுமக்கள் மற்றும் கட்டுமான தளத்தை பாதுகாப்பதற்கான பாதுகாப்பு நடைமுறைகள் கருத்திட்டம் தொடங்கும் வரையிலும் செயல்படுத்தப்படல் வேண்டும். |

## 3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமையின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பொதி 01 இன் நிர்மாண ஒப்பந்தம் ரூபா.12,586 மில்லியனுக்கு வழங்கப்பட்டது மற்றும் இதன் பொறியாளர் மதிப்பீடு ரூபா. 9,834 மில்லியன் ஆகும் அந்த ஒப்பந்த தொகையானது பொறியாளர் மதிப்பீட்டை விட 28 சதவீதம் அதிகமாக காணப்பட்டது. அத்துடன், பொதி 02 இன் நிர்மாண ஒப்பந்தம் ரூபா 145,799 மில்லியனுக்கு வழங்கப்பட்டது மற்றும் இதன் பொறியியலாளர் மதிப்பீடு ரூபா 118,977 மில்லியன் ஆகும். எனவே, பொறியாளர் மதிப்பீட்டை விட ஒப்பந்தத் தொகை 23 சதவீதம் அதிகமாக இருந்தது. இருப்பினும், அரச பெறுகை வழிகாட்டுதலின் 7.9.2 பிரிவின் பிரகாரம் வீத முரண்களை பகுப்பாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அந்த ஒப்பந்தங்கள் அரச பெறுகை வழிகாட்டுதலின் 3.1 ஆம் பிரிவிள் பிரகாரம் போட்டி ஏல செயல்முறையைப் பின்பற்றாமல் கோரப்படாத முன்மொழிவுகளாக வழங்கப்பட்டுள்ளன. மேலும், திட்டச் செலவை மிஞ்சும் அளவுக்கு நிலைமையானது மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது. | உடன்படுகின்றோம்.<br><br>கட்டணங்களை குறைப்பதற்கு ஒப்பந்ததாரருடன் பேச்சுவார்த்தை நடாத்தவும் மற்றும் ஒப்பந்ததாரருடனான ஒப்பந்தத் தொகை பொறியியலாளரின் மதிப்பீட்டோடு பொருத்தம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. | அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிப்பதற்கு முன்னர் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் ஒருவர் முறையான நடைமுறையினை பின்பற்றுதல் வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்தத்தின் பொதுவான நிபந்தனைகளின் துணைப்பிரிவு 14.7 (இ) இன் பிரகாரம், தொழில் வழங்குனர் கொடுப்பனவு சான்றிதழைப் பெற்ற பின்னர் 56 நாட்களுக்குள் இறுதி கட்டணச் சான்றிதழில் உள்ள சான்றளிக்கப்பட்ட தொகையினை செலுத்துதல் வேண்டும் மற்றும் ஒப்பந்தத்திற்கான பொதுவான நிபந்தனைகளின் துணைப்பிரிவு 14.8 இன் பிரகாரம், ஒப்பந்ததாரர் துணைப்பிரிவு 14.7 (இ) இன் பிரகாரம் கொடுப்பனவினை பெறவில்லை எனின், கால தாமதத்தின் போது செலுத்தப்படாத தொகையின் மீது மாதாந்த நிதிசார் கட்டணங்களைப் பெற்றுக்கொள்ள ஒப்பந்தக்காரருக்கு உரிமை உண்டு. எவ்வாறாயினும், கொடுப்பனவு செய்யப்படாத இடைக்கால சான்றுபடுத்தப்பட்ட கொடுப்பனவு பெறுமதிகள் முறையே ரூபா.40,347.78 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 189.5 மில்லியன் தொகையானவை 2023 டிசம்பர் 31 வரையிலும் இரண்டு தொகுதிகளுக்கான நிலுவைத் தொகைகளாக இருந்தன. | உடன்படுகின்றோம்.<br><br>ஆனால் அது பின்வருமாறு சரி செய்யப்படும்: அந்த பொதி - 1 இல் உள்ள நிலுவைத் தொகையான ரூபா. 3,742.94 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 17.0 மில்லியன் ஒப்பந்ததாரருக்கு செலுத்த வேண்டிய மொத்தத் தொகை ரூபா. 40,347.78 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 189.5 மில்லியன் ஆகும். ”ஒப்பந்தத்தின் பொது நிபந்தனை 14.7 (ஆ) துணைப்பிரிவின் பிரகாரம், பொறியாளர் அறிக்கை மற்றும் துணை ஆவணங்களைப் பெற்ற பின்னர் 56 நாட்களுக்குள் ஒவ்வொரு இடைக்கால கட்டணச் சான்றிதழிலும் தொகை சான்றளிக்கப்படும். | ஒப்பந்த நிபந்தனையின் பிரகாரம் மேலதிகமான கிரயங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மேலும், கால தாமதம் காரணமாக, பொதி 01 க்கான நிதிக் கட்டணங்கள் ரூபா.681.340 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 0.401 மில்லியன் என திருத்தப்படும். இந்தக் கோரிக்கைகள் பரிசீலனையில் உள்ளன.<br><br>உடன்படுகின்றோம். | |
| (இ) | அந்நிய செலாவணி விகிதம் மற்றும் விலை விகிதத்தின் அதிகரிப்பு காரணமாக 2026 செப்தெம்பரில் மொத்த செலவு மதிப்பீடு ரூபா.158.39 பில்லியனில் இருந்து ரூபா.450.35 பில்லியனாக அதிகரிக்கும் என்று கருதிட்டம் கணித்திருந்தது மற்றும் செலவு மதிப்பீட்டை திருத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தினை கருத்திட்டம் கோரியது. எவ்வாறாயினும், 2024 மார்ச் 31 இல் உள்ளவாறு செலவு மதிப்பீட்டை திருத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>இதனால், நிதி கிடைக்காமல் காலதாமதம் ஆவதால் கருத்திட்டச் செலவு அதிகரிக்கும் என்று அவதானிக்கப்பட்டது. திட்டத்தினை தாமதப்படுத்துவது கட்டுமானத்தின் ஒட்டுமொத்த தரத்தையும் நீண்ட காலத்தில மோசமாகப் பாதிக்கும். மேலும் திருத்தப்பட்ட செலவு மதிப்பீடுகளை தயாரிக்கும் போது, திருத்தப்பட்ட வேலைத் திட்டம் ஒரே நேரத்தில் தயாரிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | இதன் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன மற்றும் திட்டத்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடும் ஒப்புவித்தல்களை NOR மற்றும் PSC கூட்டம் போன்ற முக்கியமான கூட்டங்களில் நாங்கள் மேற்கொண்டோம் மற்றும் கூடிய விரைவில் திட்டத்தை மீண்டும் தொடங்க எங்களால் முடிந்த அனைத்தையும் மேற்கொள்வோம். சீனாவின் EXIM வங்கியிடமிருந்து நிதி கிடைக்கப்பெற்ற பின்னர், ஒப்பந்ததாரர் ஊடாக சரிசெய்தல் மற்றும் பழுதுபார்க்கும் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்படும். மேலும், திட்டத்திற்கான நிதி பெறும் திகதியினை கணிப்பது கடினம் என்பதால், பணிகள் தொடர்பான திருத்தப்பட்ட திட்டத்தை தயாரிப்பது கடினமாக காணப்படுகின்றது. | திருத்தப்பட்ட கிரயமானது மதிப்பீட்டு அளவுகோல்களுடன் ஒத்துப்போகின்றது என்பதனை தொழில் வழங்குனர் உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | இதற்கு மேலதிகமாக ,<br>2023 ஒக்தோபர் 02 அன்று நடைபெற்ற தேசிய செயல்பாட்டு அறைக் கூட்டத்தின் அறிவுறுத்தல்களின் அடிப்படையில், சாத்தியமான ஒப்பந்தம் முடிவடைவதால் ஏற்படும் அபாயத்தைக் குறைக்கும் வகையில் மீளாய்வாண்டின் போது GOSL நிதியைப் பயன்படுத்தி ஒப்பந்தக்காரருக்கு சிறப்பு முற்பணமாக இந்த திட்டம் ரூபா.500 மில்லியன் தொகையினை செலுத்தியிருந்தது. மேலும் முற்பணம் செலுத்துவது எதிர்காலத்தில் GOSL இற்கு நிதிச்சுமையாக இருக்கலாம் என அவதானிக்கப்பட்டது. | உடன்படுகின்றோம்.<br><br>ஒப்பந்ததாரர் எதிர்கொள்ளும் திரவத்தன்மை பிரச்சனைக்கு உதவி செய்ய சிறப்பு முன்பணம் ரூபா. 500 மில்லியன் GOSL மூலம் நிதியளிக்கப்பட்டது. IMF உடனான பேச்சுவார்த்தைகள் முடிவடைந்தவுடன்,<br>ஒப்பந்ததாரர் Exim வங்கியால் நிதியளிக்கப்படுவார், பின்னர் ஒப்பந்ததாரர் தானே பிரச்சனையிலிருந்து பிழைத்துக்கொள்ள முடியும். சாத்தியமான ஒப்பந்தம் | திட்டத்தை நிறுத்துவதா அல்லது தொடர்வதா என்பது குறித்து தீர்மானம் செய்ய முனனர் சரியான மதிப்பீடானது ஒருங்கிணைக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிலைகுழைவுகள் மற்றும் அடுத்தடுத்த உரிமைகோரல்களுடன் தொடர்புடைய அபாயத்தைத் தணிக்க சிறப்பு முன்பணம் செலுத்தப்பட்டுள்ளது. | |

**3.4 காணி சுவீகரிப்பு தொடர்பான சிக்கல்கள்**

| இல | கணக்காய்வு விடயம் | முகாமையின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான 38(அ) வர்த்தமானி அறிவித்தலின் கீழ் 5,245 காணிப் பகுதிகள் ஏற்கனவே சுவீகரிக்கப்படடிருந்த போதிலும் , காணி சுவீகரிப்பு சட்டத்தின் 44 வது பிரிவின் பிரகாரம் இந்த கருதிட்டமானது 1377 காணிப் பகுதிகளை மட்டுமே மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் RDA இல் பதிவு செய்துள்ளது. | சமீபத்திய செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 1377 இலக்கங்கள் பிரிவு 44 இன் கீழ் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ளன. கருத்திட்ட அதிகாரிகள், பிரதேச செயலக அதிகாரிகளுடன் கலந்துரையாடி பணிகளை விரைவுபடுத்துவதற்கான வசதிகளை செய்து கொடுத்தனர். மேலும், அமைச்சு மட்டத்தில் இப்பணிக்குள்ள முக்கியத்துவம் பற்றி பிரதேச செயலகத்திற்கு தெரிவிக்கப்பட்டது. இதன் விளைவாக, பிரதேச செயலகம் பணிகளை விரைவுபடுத்தியதுடன் மீதமுள்ளவற்றுக்கான பிரிவு 44 இனை வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. | காணி உடமையாக்கல் பணியினை விரைவாக நிறைவு செய்யவும் முறையான பதிவேடுகளை பராமரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | காணி உடமையாக்கல் பணியில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக ரூபா. 1,121 மில்லியன் வட்டிச் செலவொன்று அடையாளம் காணப்பட்டது மற்றும் இது கருத்திட்டச் செலவு அதிகரிப்பதனை நேரடியாகப் பாதிக்கும். | உடன்படுகின்றோம்.<br><br>31.12.2023 இல் உள்ளவாறான பதிவு செய்யப்பட்ட வட்டி ஏற்பாடானது ரூபா. 220.45 மில்லியன் ஆகும் மற்றும் 2023 ஆம் ஆண்டிற்கான வட்டி செலவாக ரூபா. 105 மில்லியன் பதிவு செய்யப்பட்டுள்ளது. காணி உடமையாக்கல் பணியில் ஏற்பட்ட காலதாமதம் உள்ளிட்ட தவிர்க்க முடியாத தாமதங்கள்தான் இதற்குக் காரணமாகும். | காணி உடமையாக்கல செயற்பாட்டினை விரைந்து முடிக்க மற்றும் மேலதிக வட்டி செலுத்தப்படுவதை தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் மற்றும் முறையான பதிவேடுகள் பராமரிக்கப்படல் வேண்டும். |

## 3.5 குறைவான பயன்பாடுடைய / பயன்படுத்தப்படாத / குறைந்த பயன்பாடுடைய வளங்கள்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமையின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கடன் வழங்கும் நிறுவனத்தால் ரூபா.134,628 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 989.44 மில்லியன் நிதியளிக்க ஒப்புக் கொள்ளப்பட்ட போதிலும், 5 சதவீத நிதியைக் குறிக்கும் ரூபா.13,266 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 51.57 மில்லியன் மட்டுமே 2023 டிசம்பர் 31 இல் உள்வாறு பயன்படுத்தப்பட்டிருந்தது மற்றும் செயற்றிட்டத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து 04 வருடங்கள் கழிந்த பின்னரும் கூட மீளாய்வாண்டில் எவ்விதமான பணமும் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, மொத்த ஒதுக்கீடு ரூபா. 989.44 மில்லியன் அமெரிக்க டாலர்களில் 0.3 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அர்ப்பணிப்பு கட்டணங்கள் ரூபா.622.95 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 3.1 மில்லியன் 2022 டிசம்பர் 31 வரைக்கும் கடனின் செலுத்தப்படாத மீதியின் சார்பாக அரசாங்கத்தினால் செலுத்தப்பட்டது மற்றும் மீளாய்வாண்டில் எவ்வித அர்ப்பணிப்பு கட்டணமும் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | EXIM வங்கியிடம் இருந்தான வங்கி கடன் ஐ.அ.டொலர் 989.44 தொகையில் ஒப்பந்தக்காரருக்கு ஐ.அ.டொலர் 51.57 மில்லியன் மட்டுமே 2022 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளன.<br>சர்வதேச நாணய நிதியத்தின் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை இறுதி செய்யப்படாததால், வெளிநாட்டு கடனை வழங்குவதற்கு இன்னும் ஆரம்பிக்கவில்லை. அர்ப்பணிப்பு கட்டணத்தைச் செலுத்துவது தொடர்பான கடிதங்கள் எதுவும் CEP-1 இடம் இல்லை, ஏனெனில் அத்தகைய கொடுப்பனவுகள் திறைசேரியினால் தனி வாக்குக் குறியீட்டிலிருந்து மேற்கொள்ளப்படுகின்றன. | திறைசேரியுடன் முறையான ஒருங்கிணைப்பு மற்றும் அறிக்கையிடல் முறைமைகள் பராமரிக்கப்படல் வேண்டும் மற்றும் பிரமத கணக்கீட்டு உத்தியோகத்தர் தற்போதைய சூழ்நிலையில் அர்ப்பணிப்பு கட்டணங்களை குறைக்க ஒப்பந்தத்தின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

## 3.6 முந்தைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட் தீர்க்கப்படாமல் இருந்த விடயங்கள்.

| இல | கணக்காய்வு விடயம் | முகாமையின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | உள்ளூர் கூறுகளின் கீழ் ரூபா.755 மில்லியன் மற்றும் வெளிநாட்டு கூறுகளின் கீழ் ஐ.அ.டொலர் 7 மில்லியன் வேலை ஆரம்பிப்பு முற்பணம் (Mobilization Advance) பொதி 01 க்கு செலுத்தப்பட்டது. எவ்வாறாயினும், 2023 டிசம்பர் 31 வரையிலும் வேலை ஆரம்பிப்பு முற்பணத்தின் எந்த தொகையும் மீள அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், வேலை ஆரம்பிப்பு முற்பணமாக ஐ.அ.டொலர் 161 மில்லியன் பொதி -02 க்கு செலுத்தப்பட்டது மற்றும் ஒப்பந்ததாரரின் மெதுவான முன்னேற்றம் | உடன்படுகின்றோம்.<br><br>ஒப்பந்தத்தின் குறிப்பிட்ட நிபந்தனைகளின் (PCC) துணைப்பிரிவு 14.2 (இ) இன் பிரகாரம், ஒப்பந்தக்காரருக்குச் சான்றளிக்கப்பட்ட அனைத்து இடைக்காலக் கொடுப்பனவுகளும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத் தொகையில் 30 (முப்பது) சதவீதத்தை எட்டியதைத் தொடர்ந்து, பொதி 1 இற்கான அடுத்த இடைக்காலக் கட்டணச் சான்றிதழில் முற்பண | ஒப்பந்த நிபந்தனையின் பிரகாரம் எதிர்மறையான தாக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன் அதனை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கையினை தொழில் வழங்குனர் எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக 2023 டிசம்பர் 31 இல் ஐ.அ.டொலர் 10 மில்லியன் மாத்திரம் கருத்திட்டம் மீள அறவீடு செய்திருந்தது. | கொடுப்பனவுகளின் கழிப்பனவுகள் ஆரம்பிக்கப்படும். பொதி 2 இற்கான முற்பணத்தின் மீள் அறவீடானது ஏற்கனவே தொடங்கப்பட்டு ஐ.அ.டொலர் 10,810,145.81 மீள் அறவீடு செய்யப்பட்டது. | |
| (ஆ) | இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் இல.18 இன் BOQ உருப்படி 1001 (7) இன் பிரகாரம், தற்காலிக வீதிகளை அல்லது பைலட் வீதிகளை நிர்மாணம் செய்வதற்கு ரூபா.750 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. எவ்வாறாயினும், வேறுபாடுகளை அங்கீகரிக்கும் குழுவின் அனுமதியின்றி ரூபா.981 மில்லியன் கொடுப்பனவு செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. | உடன்படவில்லை.<br><br>இத்திட்டத்தின் பொதி I மற்றும் பொதி II ஆகியவற்றிற்கான சேவை வீதியினை (பைலட் வீதி) அமைப்பதற்கு முறையே ரூபா. 750 மில்லியன் மற்றும் ரூபா. 135 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன்பிரகாரம், முழு திட்டத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூபா. 885 மில்லியன் ஆகும். 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட தொகை என்ற போதிலும், இந்த வேலை தற்காலிகத் தொகையின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளதால், வேலை செய்யப்படும் நேரத்திற்கு ஏற்ப சந்தை விலையின் அடிப்படையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது. | கொடுப்பனவினை அங்கீகரிக்கும் முன் பொறியாளர் ஏதேனும் வேறுபாடுகளுக்கு அனுமதியினை பெற்றுக்கொள்ள வேண்டும். |